# Kanchipuram Dt

## காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

*

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

மதிப்பெண்கள் : 90

நேரம் : 3.00 மணி

பகுதி - I

குறிப்பு : அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

14 x 1 = 14

பலவுள் தெரிக.

1. பாயிரம் இல்லது ________ அன்றே.
   அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
2. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?
   அ) ஏதிலிக்குருவிகள்-மரபுக்கவிதை ஆ) திருமலை முருகன் பள்ளு-சிறுகதை
   இ) யானை டாக்டர்-குறும்புதினம் ஈ) ஐங்குறுநூறு-புதுக்கவிதை
3. காவடிச் சிந்துக்கு தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
   அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்
4. துன்பப்படுபவர் ________.
   அ) தீக்காயம்பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்
   இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்
5. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
   அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13
6. சரியான விடையைத் தேர்க.
   அ) கல்வி அழகே அழகு - 1) தொல்காப்பியச் சிறப்புப் பாயிர உரைப்பாடல்
   ஆ) இளமையில் கல் - 2) திருமந்திரம்
   இ) துணையாய் வருவது தூயநற்கல்வி - 3) ஆத்திசூடி
   ஈ) பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல் - 4) திருக்குறள்
   5) நாலடியார்
   அ) 2,3,4,1 ஆ) 3,4,1,2 இ) 5,3,2,1 ஈ) 4,1,2,5
7. மகிழ்ச்சியின் மைந்தாறும் போழ்து ________ நினை.
   அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை
   இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை
8. ***இலக்கணக்குறிப்புத் தருக :*** மாநகர்
   அ) உரிச்சொல் தொடர் ஆ) உருவகம் இ) பண்புத்தொகை ஈ) உவமைத்தொகை
9. 'சின்னச்சீறா' என்ற நூலை எழுதியவர்
   அ) உமறுப்புலவர் ஆ) கடிகை முத்துப் புலவர்
   இ) பனி அகமது மரைக்காயர் ஈ) நபிகள் பெருமான்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



10. கீழ்க்காண்பனவற்றுள் 'இறைச்சி' பற்றிய கூற்றைத் தேர்க.
அ) குறியீடுகளைக் கொண்டு உருவாக்கப்படும்
ஆ) ஒப்பீட்டுச் செறிவும் பொருள் அழுத்தமும் சிறக்க அமையும்
இ) வினை, பயன், வடிவம், நிறம் ஆகிய நான்கின் அடிப்படையில் தோன்றும்
ஈ) உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப்பொருள்

11. ஆசிரியப்பாவிற்குரிய ஓசை
அ) செப்பலோசை ஆ) அகவலோசை இ) துள்ளலோசை ஈ) இவை அனைத்தும்

12. பாரதி பெண்களுக்காகத் தமது எந்த இதழில் குறள் வெண்பா எழுதியுள்ளார்?
அ) சுதேசமித்திரன் ஆ) இந்தியா இ) சக்ரவர்த்தினி ஈ) கர்மயோகி

13. Classical language என்பதன் கலைச்சொல்
அ) மதிப்புக் கல்வி ஆ) கல்விக்குழு இ) செம்மொழி ஈ) பண்பாட்டுக் கூறுகள்

14. "பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்" என்னும் நூலின் ஆசிரியர்
அ) இந்திரன் ஆ) வால்ட் விட்மன் இ) கீட்ஸ் ஈ) பாப்லோ நெரூடா

## பகுதி - II

### பிரிவு - 1

3 x 2 = 6

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

15. 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?

16. வளருங் <u>காவில் முகில்தொகை ஏறும்</u> - பொன்
மாடம் எங்கும் அகிற்புகை நாறும் - *அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?*

17. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

18. மதினா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

### பிரிவு - 2

2 x 2 = 4

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

19. சங்க காலத்தில் தமிழ் மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?

20. ஆனந்தரங்கனின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.

21. வரை என்னும் சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?

### பிரிவு - 3

7 x 2 = 14

**குறிப்பு : எவையேனும் ஏழனுக்கு விடை தருக.**

22. ***தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.***
பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போகவேண்டும் மகிழ்ச்சி

23. ***மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து சொற்றொடர் அமைக்கவும் :***
வலி, வளி, வழி

24. ***வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.***
கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்

25. ***ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.***
அ) மலிந்த ஆ) வைத்தார்

26. ***ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.***
அ) சிறுகோல் ஆ) மனையென

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



27. *புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*
*(மதி, இதழ், கம்பு, வளை, சினை, ஆழி)*
அ) அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுவே தான் ;________.
ஆ) பூவின் உறுப்பும் நானே; புன்னகையின் பிறப்பிடமும் நானே ________.
28. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.*
அ) அறிவில்லாதவன் ஆ) நஞ்சிருக்கும்
29. *கலைச்சொல்லாக்கம் தருக.*
அ) Culture ஆ) Book Review
30. ஆசிரியப்பாவிற்குரிய சீரும் தளையும் யாவை?

பகுதி - III

பிரிவு - 1

குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?
32. "ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
33. "மறுவிலாத அரசென இருந்த மாநகர்" - உவமையைப் பொருளுடன் விளக்குக.
34. விரும்பியதை அடைவது எப்படி? குறள்வழி விளக்குக.

பிரிவு - 2

குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

35. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.
36. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.
37. உள்ளுறை உவமை, இறைச்சி - எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
38. வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.

பிரிவு - 3

குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x4=12

39. அ) சொல் பின்வருநிலையணியை விளக்குக. *(அல்லது)*
ஆ) பிறிதுமொழிதலணியை சான்றுடன் விளக்குக.
40. அ) பாலைத் திணையைச் சான்றுடன் விளக்குக. *(அல்லது)*
ஆ) பொருண்மொழிக் காஞ்சித் துறையை சான்றுடன் விளக்குக.
41. *பின்வரும் பாடலைப் படித்து பொருளுணர்ந்து மையக்கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றினை எழுதுக.*

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு
வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே

வளர்ந்து வளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடி வாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!

கூகை ஆந்தை போல நீயும் வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!

பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே!

- கவிமணி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




42. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.

அ) சிறு துரும்பும் பல்குத்த உதவும் *(அல்லது)*

ஆ) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

43. கருத்துப் படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.




## பகுதி - IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கும் மிகாமல் விடையளிக்கவும். 3x6=18

44. அ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.

*(அல்லது)*

ஆ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள்வழி இயற்கை வளங்களை விவரிக்க.

45. அ) பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபு வழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன - கூற்றினை மெய்ப்பிக்க.

46. அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுது.

*(அல்லது)*

ஆ) பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.

## பகுதி - V

குறிப்பு : அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2=6

47. அ) "அம்ம வாழி ......." எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'யான்' என்று முடியும் குறட்பாவை எழுதுக.

******

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com